**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 296/**மா/2023**

நாள்: **30.11.2023**

க.கனிமொழி
தென்காசி – முறையீட்டு மனுதாரர்

மாவட்ட பஞ்சாயத்து செயலர்,
தென்காசி – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், தென்காசி, வடக்கு மாசி வீதி, கதவு எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் க.கனிமொழி என்பவரின் 08.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.09.2023–ல் பெறப்பட்டு, 296/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாராது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், தென்காசி, வடக்கு மாசி வீதி, கதவு எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் க.கனிமொழி என்பவர் தனது 08.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" நான் தென்காசி மாவட்டத்தின் 6–ம் வார்டு கவுன்சிலராக மக்கள் பணியாற்றி வருகிறேன். தென்காசி மாவட்டத்தில் மொத்தம் 14 மாவட்ட கவுன்சிலர்கள் உள்ளனர். மாவட்ட பஞ்சாயத்து தலைவி அவர்களால் 12.01.2022ம் தேதி அன்று 7 தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கு கவுன்சிலர்கள் அனைவருக்கும் அஜண்டா அனுப்பப்பட்டு அந்த அஜண்டாவில் உள்ள பொருட்குறிப்பு சம்பந்தமாக 12.01.2022ம் தேதி அன்று ஊராட்சி மன்ற கூட்டத்திற்கு தென்காசி மாவட்ட கவுன்சிலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அப்போது நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அதில் நாங்கள் அனைவரும் கையொப்பம் செய்தோம். பின்பு ஊராட்சி மன்றக்கூட்டம் முடிக்கப்பட்டது. நாங்கள் கையெழுத்து செய்த தீர்மானப்புத்தகத்தில் அஜண்டாவில் எழுதாத 5 பொருட்குறிப்புகளை மாவட்ட கவுன்சிலர்கள் யாருக்கும் தெரியாமல் தீர்மானப்புத்தகத்தில் போர்ஜரியாக (Forgery) எழுதி அதன் மூலம் ரூ.1,75,00,000/–த்தை மாவட்ட பஞ்சாயத்து தலைவி கையாடல் செய்துள்ளார். அவ்வாறு கையாடல் செய்ததை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கத்தின் இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் கடிதம் அனுப்பியும் நேரில் சென்றும் மாவட்ட கவுன்சிலர்கள்

அனைவரும் புகார் கொடுத்ததின் பேரில் மனுவின் மீதான பரிசீலனையின்படி மேற்படி தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.

மேற்படி பிரச்சனை முடிந்த பின்பு ஒவ்வொரு கூட்டத்திலும், மாவட்ட பஞ்சாயத்து தலைவி, மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம் 2022–2023லிருந்து அவர்கள் வார்டுக்கு மட்டும் அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்வதும் மற்ற வார்டுகளுக்கு மிகவும் குறைவாக மக்களுக்கு எந்தவொரு நலத்திட்ட உதவிகளும் செய்யாத வகையில் நிதி ஒதுக்கீடு செய்து அராஜகமாக மாவட்ட கவுன்சிலர்கள் அனைவரையும் பயமுறுத்தி " நீங்கள் இந்த தீர்மானத்தில் கையெழுத்து செய்யவில்லையென்றால் உங்க வார்டுக்கு எந்தவொரு நிதியையும் ஒதுக்கமாட்டேன்" என்று மாவட்ட பஞ்சாயத்து தலைவி அராஜகமாக செயல்பட்டு வருகிறார். இதற்கு உடந்தையாக மாவட்ட பஞ்சாயத்து செயலர் தீர்மானப்புத்தகத்தை பார்க்க விடாமலும் மாவட்ட கவுன்சிலர்களை தீர்மானப்புத்தகத்தில் கையெழுத்து செய்ய விடாமலும் மாவட்ட பஞ்சாயத்து தலைவியும், மாவட்ட பஞ்சாயத்து செயலரும் அராஜகம் செய்து வருகின்றனர்.

கடந்த 21.07.2023ம் தேதியில் நடந்த மாவட்ட பஞ்சாயத்து கூட்டத்தில் 6 மற்றும் 9 வது வார்டு மாவட்ட கவுன்சிலருக்கு எந்தவொரு நிதியும் ஒதுக்காமல் மாவட்ட பஞ்சாயத்து தலைவியும், மாவட்ட பஞ்சாயத்து செயலரும் புறக்கணித்து வருகின்றனர். அவர்களின் ஊழலுக்கு உடந்தையாக இல்லை என்ற ஒரே காரணத்திற்காக எனக்கும், 9வது வார்டு கவுன்சிலருக்கும் எந்தவொரு நிதியும் ஒதுக்காமல் இருந்து வருகின்றனர். இதனால் 6வது வார்டு மாவட்ட கவுன்சிலர் பகுதிக்கு எந்தவொரு மக்கள் நலத்திட்ட உதவியும் என்னால் செய்ய முடியவில்லை.

மாண்புமிகு நடுவர் அவர்கள் கருணை கூர்ந்து மாவட்ட பஞ்சாயத்து தலைவி மற்றும் மாவட்ட பஞ்சாயத்து செயலர் இருவரின் அராஜகத்தையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் கண்டித்து மத்திய மற்றும் மாநில நிதிக்கு மானியத்திலிருந்து வருகிற நிதியை 14 வார்டு கவுன்சிலர்களுக்கு சரி சமமாக பங்கீடு செய்ய மாவட்ட பஞ்சாயத்து தலைவி மற்றும் மாவட்ட பஞ்சாயத்து செயலர் இருவருக்கும் உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மாவட்ட பஞ்சாயத்து செயலரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 10.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 06.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

" நான் தென்காசி மாவட்ட பஞ்சாயத்தில் 6ம் வார்டு கவுன்சிலராக பணியாற்றி வருகிறேன். தென்காசி மாவட்டத்தில் மொத்தம் 14 மாவட்ட கவுன்சிலர்கள் உள்ளனர். நாங்கள் கையெழுத்திட்ட தீர்மானப்புத்தகத்தில் தென்காசி மாவட்ட பஞ்சாயத்து செயலர், மாவட்ட கவுன்சிலர்கள் யாருக்கும் தெரியாமல் தீர்மானப்புத்தகத்தில் அஜண்டாவில் இல்லாத 5 பொருட்குறிப்புகளை போர்ஜரியாக (Forgery) எழுதி முறைகேடு செய்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கத்தின் இயக்குநர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாவட்ட கவுன்சிலர்கள் அனைவருக்கும் புகார் அளித்ததன் பேரில்

மேற்கண்ட தீர்மானம் இரத்து செய்யப்பட்டது. மாவட்ட பஞ்சாயத்து செயலரும், மன்றத்தலைவரும் சேர்ந்து 6வது வார்டு மாவட்ட கவுன்சிலராகிய எனக்கும், வேறு வார்டு கவுன்சிலர்களுக்கும் எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்வதில்லை. இதுகுறித்தும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. எனவே 50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட எனது வார்டில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியை மாவட்ட பஞ்சாயத்து மூலம் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 08.09.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் என்னுடைய மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) தென்காசி மாவட்ட ஊராட்சி செயலர்(பொறுப்பு) 10.11.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" தென்காசி மாவட்ட ஊராட்சி செயலராக (பொறுப்பு) 01.06.2023 முதல் பணியாற்றிவருகிறேன். மாவட்ட பஞ்சாயத்துகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான நிதி மன்றத்தின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் மனுதாரரின் வார்டில் பணிகளை மேற்கொள்ள அவ்வப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்த மாதத்திலும் மனுதாரரின் வார்டுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்து, இம்முறைமன்றத்தில் என்னால் அளிக்கப்படும் 06.11.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) மாவட்ட ஊராட்சி செயலர்(பொறுப்பு) தனது 06.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்**:-

" நான் தென்காசி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் தென்காசி மாவட்ட அலகில் உதவி இயக்குநர் (தணிக்கை) ஆக 04.05.2022 முதல் நாளது வரை பணிபுரிந்து வருகிறேன். தென்காசி மாவட்ட ஊராட்சி செயலர் பதவியினை 01.06.2023 முதல் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறேன்.

தென்காசி மாவட்ட ஊராட்சி 14 மாவட்ட ஊராட்சி வார்டுகளை உள்ளடக்கியது. இதன்படி தென்காசி மாவட்ட ஊராட்சிக்குழு 14 மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கொண்ட உள்ளாட்சி அமைப்பாக செயல்படுகிறது. மேற்படி மாவட்ட ஊராட்சிக்குழுவின் உறுப்பினரான மனுதாரர் மாவட்ட ஊராட்சியின் 6வது வார்டு உறுப்பினர் 12.01.2022 ஆம் தேதிய மாவட்ட ஊராட்சிக்குழுக் கூட்ட நடவடிக்கை பொறுத்து தாக்கல் செய்துள்ள குற்றச்சாட்டுக்கள் மீதான மறுப்புரையை கீழ்க்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

(அ) மனுதாரர் மற்றும் இதர மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் அளித்த புகாரின் மீது திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தென்காசி அவர்களால் 29.03.2022 அன்று முற்பகல் 11.00 மணிக்கு மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களிடம் நேரடி விசாரணை நடத்தப்பட்டு அவர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் 12.01.2022ம் தேதிய மாவட்ட ஊராட்சிக்குழுக்கூட்டத்தில் 7 கூட்டப்பொருள் முன் வைக்கப்பட்டுள்ளது. பொருட்குறிப்பு 1-லிருந்து 5 வரை மற்றும் 7 ஆகியவற்றின் தீர்மான விவரங்கள் குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சி தீர்மானப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்ட பேனா மையின் நிறமும் பொருட்குறிப்பு எண்.6க்கு எதிரில் பணிகளின் பெயர்கள் குறிப்பிட்டு மாவட்ட

ஊராட்சித்தலைவரால் பயன்படுத்தப்பட்ட பேனாவின் மையின் நிறமும் (பக்கம் 27 & 29) வேறுபாடாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின்படியும், மாவட்ட ஊராட்சி மன்ற அசல் தீர்மான புத்தகத்தின்படியும் கூட்ட அழைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட கூட்டப்பொருள் அல்லாது புதிய கூட்டப்பொருள் ஏதும் மன்றக்கூட்டத்திலும் இணைக்கப்படவில்லை. பொருட்குறிப்பு எண்.6க்கான தீர்மான நடவடிக்கையாக 5 பணிகள் மாவட்ட ஊராட்சித் தலைவரால் எழுதப்பட்டுள்ளன. விசாரணை அலுவலர் மாவட்ட ஊராட்சித்தலைவரின் இச்செயலுக்கு கீழ்க்காணும் காரணத்தை தனது விசாரணை அறிக்கையில் பதிவு செய்துள்ளார்.

(1) 12.01.2022 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் 7 பொருட்குறிப்புகள் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொருள் எண்கள் 1,2,3 மற்றும் 4 மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தீர்மான எண்கள் குறிப்பிடப்படவில்லை. பொருள் எண்.5 வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) பிரேரணையின்படி ரத்து செய்ய மன்ற அனுமதிக்காக வைக்கப்பட்டு, இரத்து செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தீர்மான எண் குறிப்பிடப்படவில்லை. பொருள் எண்: 6–ல் மாநில நிதிக்குழு மானியம் 2021–2022ம் ஆண்டிற்கான 5 பணிகள் விபரம் ரூ.1,70,57,000/– மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருள் எண்.7 அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தின்போது விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டு பதிவேடு பக்கம் எண்.31–ல் இரு இடங்களில் தலைவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. இறுதியாக தீர்மான புத்தகத்தின் பக்கம் எண்.33–ன்படி துணைத்தலைவர், வார்டு எண்.1 மற்றும் 11வது வார்டு உறுப்பினர்கள் தவிர்த்து (மூவரும் கூட்ட வருகைப்பதிவேட்டில் மட்டும் கையொப்பமிட்டுள்ளனர்) 10 உறுப்பினர்கள் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. மேலும் தீர்மானப்பதிவேட்டில் கூட்டப்பொருள்கள் அனைத்திற்கும் தீர்மான எண் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

மேலும், பொருட்குறிப்பு 1–லிருந்து 5 வரை மற்றும் பொருட்குறிப்பு 7 ஆகியவற்றில் தீர்மான விவரங்கள் குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சித் தலைவரால் பயன்படுத்தப்பட்ட பேனாவின் மையின் நிறமும் பொருட்குறிப்பு எண்.6–க்கு எதிரில் 5 பணிகளின் பெயர்கள் குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சித்தலைவரால் பயன்படுத்தப்பட்ட பேனாவின் மையின் நிறமும் (பக்கம் 27 & 29) வேறுபாடாக உள்ளது.

(2) அலுவலக ரீதியிலான நடைமுறைகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு முழுமையாக தெரிய வாய்ப்பில்லை. எனவே மாவட்ட ஊராட்சிக் கூட்டம் நடத்துவது தொடர்பாக தேவையான அலுவலக நடைமுறைகள் குறித்து மாவட்ட ஊராட்சி செயலர் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இத்தீர்மான பதிவேடு கூர்ந்தாய்வின்படி அலுவலக நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படவில்லை.

(3) எனவே மேற்படி விசாரணையின்படியும், மாவட்ட ஊராட்சித்தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் தீர்மானப்பதிவேடு கூர்ந்தாய்வின்படி பொருட்குறிப்பு 6–ல் குறிப்பிட்டுள்ள பணிகள் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதாக தெரியவில்லை.

விசாரணை அலுவலரின் மேற்படி கூற்றினை ஏற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்கள் தமது செயல்முறை ஆணை எண். அ6/11107/2022 நாள் 18.04.2022ன்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 202–ல் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அரசாணை (நிலை) எண்.175 ஊரக வளர்ச்சி (சி.1) துறை நாள். 09.06.1997ன் பத்தி எண்.9–க்கு புறம்பாக தென்காசி மாவட்ட ஊராட்சியில் 12.01.2022ஆம் தேதியன்று நடத்தப்பட்ட சாதாரண கூட்டத்தின் பொருள் எண்.6ல் இயற்றப்பட்ட தீர்மானத்தினை ரத்து செய்து ஆணையிட்டுள்ளார்.

மேலும், மனுதாரர் இப்பத்தியில் மாவட்ட பஞ்சாயத்து தலைவி தொகை ரூ.1,75,00,000/-–ஐ கையாடல் செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். மேற்படி மாவட்ட ஊராட்சிக் குழுவின் 12.01.2022ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் பொருட்குறிப்பு எண்.6ல் மேற்கொள்ள வேண்டிய பணிகளாக சேர்க்கப்பட்ட 5 பணிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ–1,75,00,000/– மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.அ6/11107/2022 நாள் 18.04.2022ன் மூலம் மேற்படி தீர்மானம் ரத்து செய்து உத்தரவிட்டதன்படி மேற்படி பணிகள் தேர்வும் இரத்து செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இதனை கையாடல்களாக மாவட்ட பஞ்சாயத்து தலைவி மீது தெரிவித்துள்ள ஆதாரமற்ற குற்றத்தை பணிவுடன் மறுக்கிறேன்.

முறையீட்டு மனுதாரர் பத்தி (2)ல் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் 1–ஆம் எதிர்மனுதாரரால் தீர்மான புத்தகத்தில் கையெழுத்திட கேட்டு மிரட்டுவதாகவும் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தீர்மானப்புத்தகத்தில் கையெழுத்திடவிடாமலும் தடுத்ததாகவும் புகார் செய்துள்ளார். இவ்வழக்கின் இரண்டு எதிர்மனுதாரர்கள் மீதான குற்றச்சாட்டுகள் ஒன்றுக்கொன்று முரணாக கூறப்பட்டுள்ளது. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் அவர்களின் கடிதம் எண்.5125/2020/பரா./1.1 நாள் 14.12.2020ல் வழங்கியுள்ள அறிவுரைகள் அனைத்தும் மாவட்ட ஊராட்சி செயலரால் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒரு மாவட்ட ஊராட்சிக்குழு கூட்ட முடிவில் அக்கூட்டத்தின் கடைசி தீர்மானத்திற்கு கீழ் அனைத்து உறுப்பினர்களின் தீர்மானப்பதிவு விவரங்களை பார்வையிட்டு கையொப்பம் இட தீர்மானப்புத்தகம் வழங்கப்படுகிறது. மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் அவர்களின் முழு விருப்பத்தின் பேரில் தீர்மானப் புத்தகத்தில் கையெழுத்திடவோ கையெழுத்திடாமலிருக்கவோ உரிமையுண்டு. இந்நேர்வில் மாவட்டக்குழு உறுப்பினர்களின் கையொப்பத்தை வலியுறுத்தி பெறுவதோ கையொப்பமிடும் உரிமையினை தடுத்து உறுப்பினருக்கு தீர்மான புத்தகத்தை தர மறுத்த நிகழ்வோ தென்காசிமாவட்ட ஊராட்சிக்குழு கூட்டத்தின்போது ஏற்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முறையீட்டு மனுதாரர் பத்தி 3–ல் 21.07.2023ம் தேதியில் நடந்த மாவட்ட ஊராட்சிக்குழுக் கூட்டத்தில் வார்டு எண்.6 மற்றும் வார்டு எண்.9 உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர், மாவட்ட ஊராட்சி, தென்காசி அவர்களால் 10 வட்டாரங்களிலும் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ள 244.28 இலட்சம் மதிப்பீட்டிலான 33 பணிகளுக்கு மன்ற ஒப்புதல் பெறும் வகையில் பொருட்குறிப்பில் சேர்த்திட மாவட்ட ஊராட்சித் தலைவர் தனது 10.07.2023ம் தேதிய கடிதத்தில், செயலர், மாவட்ட ஊராட்சியை கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்

(வட்டார ஊராட்சி) முன்மொழிவு பெறப்பட்டு மாவட்ட ஊராட்சித்தலைவரால் 21.07.2023ம் தேதிய சாதாரண கூட்டத்தில் பொருட்குறிப்பு முன் வைக்கப்பட்டது.

மேற்படி மாவட்ட ஊராட்சிக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட 5 பொருட்குறிப்புகளுக்கும் மாவட்ட ஊராட்சி குழு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று 02.09.2022 அன்று நடைபெற்ற மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திலும் மாவட்ட ஊராட்சி தலைவியின் தொகுதிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களை மிரட்டி கையெழுத்து பெறப்பட்டது ஆகிய குற்றச்சாட்டுக்கள் தெரிவித்து மனுதாரர் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் முறையீடு செய்ததின் பேரில் 08.09.2022 அன்று மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களிடம் நேரடி விசாரணை நடத்தப்பட்டதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விசாரணை புகாரை தள்ளுபடி செய்துள்ள விபரத்தினை பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து (W.P. (MD) 7163 of 2023) மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்ய உத்தரவிட கோரியதற்கு மாண்பமை நீதிமன்றம் 31.03.2023 அன்று வழங்கிய தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

> " A representation given by the petitioner on 01.03.2023 by which he states that the second respondent/Inspector of District Panchayat/The District Collector, Tenkasi District, should inspect the distribution of funds allotted to the Central and State Fund Committees by the third respondent/The Chairman, Tenkasi District Panchayat to the wards of Tenkasi District Panchayats.
>
> The Court is not the monitoring authority or the disciplinary authority of the Collector/Inspector of District Panchayat of the Tenkasi District.
>
> It is not for the Court to give any mandamus for consideration of any such representation. It is for the District Collector to consider it or not to consider it."

எனவே மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் மனுதாரரின் எந்தக்கூற்றிலும் குற்றச்சாட்டிலும் உண்மையில்லை என்பதால் மனுதாரரின் குற்றச்சாட்டு மனுவினை தள்ளுபடி செய்ய பணிந்து கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், தென்காசி மாவட்ட பஞ்சாயத்து செயலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் தாங்கள் கையெழுத்திட்ட தீர்மானப்புத்தகத்தில் தென்காசி மாவட்ட பஞ்சாயத்து செயலர், மாவட்ட கவுன்சிலர்கள் யாருக்கும் தெரியாமல் தீர்மானப்புத்தகத்தில் அஜண்டாவில் இல்லாத 5 பொருட்குறிப்புகளை போர்ஜரியாக (Forgery) எழுதி

முறைகேடு செய்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கத்தின் இயக்குநர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மாவட்ட கவுன்சிலர்கள் அனைவருக்கும் புகார் அளித்ததன் பேரில் மேற்கண்ட தீர்மானம் இரத்து செய்யப்பட்டது. மாவட்ட பஞ்சாயத்து செயலரும், மன்றத்தலைவரும் சேர்ந்து 6வது வார்டு மாவட்ட கவுன்சிலராகிய எனக்கும், வேறு வார்டு கவுன்சிலர்களுக்கும் எந்தவொரு நிதியும் ஒதுக்கீடு செய்வதில்லை. இதுகுறித்தும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. எனவே 50 ஆயிரம் மககள் தொகை கொண்ட தனது வார்டில் அத்தியாவசியப்பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியை மாவட்ட பஞ்சாயத்து மூலம் வழங்கிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மாவட்ட பஞ்சாயத்துகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான நிதி மன்றத்தின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது. மேலும் மனுதாரரின் வார்டில் பணிகளை மேற்கொள்ள அவ்வப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்த மாதத்திலும் மனுதாரரின் வார்டுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தென்காசி மாவட்ட ஊராட்சி செயலர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்களிடம் நேரடி விசாரணை நடத்தி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்ட பொருட்குறிப்புகளுக்கு தீர்மான எண்கள் குறிப்பிடப்படவில்லை. மேலும் பொருள் எண்.6ல் மாநில நிதிகுழு மானியம் 2021–2022ம் ஆண்டிற்கான 5 பணிகள் விபரம் ரூ.1,70,57,000/– மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருள் எண் 7 அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தின்போது விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டு பதிவேடு பக்கம் எண் 31ல் இரு இடங்களில் தலைவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. தீர்மான புத்தகத்தில் 10 உறுப்பினர்கள் கையொப்பம் மட்டும் பெறப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் குறிப்பிட்ட குற்றச்சாட்டான மாவட்ட ஊராட்சித்தலைவரால் பயன்படுத்தப்பட்ட பேனாவின் மையின் நிறம் பக்கம் 27 மற்றும் 29ல் வேறுபாடாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். மேலும் அலுவலக ரீதியான நடைமுறைகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு முழுமையாக தெரிய வாய்ப்பில்லை. எனவே மாவட்ட ஊராட்சிக் கூட்டம் நடத்துவது தொடர்பாக தேவையான அலுவலக நடைமுறைகள் குறித்து மாவட்ட ஊராட்சி செயலர் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் தீர்மான பதிவேடு கூர்ந்தாய்வின்படி அலுவலக நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படவில்லை. மேலும் பொருட்குறிப்பு 6ல் குறிப்பிட்டுள்ள பணிகள் மாவட்ட ஊராட்சி மன்ற கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதாக தெரியவில்லை என திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரால் பொருள் எண் 6ல் இயற்றப்பட்ட தீர்மானம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விசாரணை செய்து புகாரை தள்ளுபடி செய்துள்ளார் எனவும் மாவட்ட ஊராட்சி செயலர்(பொறுப்பு) தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டத்தில் உள்ள 14 வார்டுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் விவரத்தினை தென்காசி மாவட்ட ஊராட்சி செயலர்(பொறுப்பு) இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்காதது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளது.

இந்நேர்வு தொடர்பாக இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- மக்களின் பிரதிநிதிகளுக்கிடையே நிர்வாகம் மற்றும் நிதி பொறுப்புகள் பற்றி தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

- உள்ளாட்சி அமைப்பினால் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்களுக்குரிய பொறுப்புகள் மற்றும் அலுவலர்களது கடமைகள் பற்றியும் தெளிவாக விளக்கப்பட வேண்டும். இது அனைத்து திட்டங்களையும் முறையாக செயல்படுத்த உதவும்.

- உள்ளாட்சி அமைப்புகளுக்கு எழும் தொழில் நுட்ப ரீதியான சந்தேகங்களை தீர்ப்பதற்கும் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கவும் சம்மந்தப்பட்ட தொழில் நுட்பத்துறைகளை அணுக வேண்டும்.

- உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான செயல் விளக்கங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு காலமுறை இடைவெளியில் வழங்கப்பட வேண்டும்.

- மாவட்ட ஊராட்சிக்கு தேவையான நிதியை மாவட்ட நிர்வாகத்துடன் உரிய முறையில் கேட்டு பெற வேண்டும். இதற்காக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் முறையான நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.
- மாவட்ட நிர்வாகம் உடனடியாக மாவட்ட கவுன்சிலர் கோரிக்கைகளை நிறைவேற்ற போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

In this particular case the resolutions passed on 12/01/2022 have been abrogated by the Inspector of Panchayats on the petitioner's representation along with the other District Panchayat councillors. The reason for such cancellation though attributed to different colors of ink used by the District Panchayat Chairperson does not cut ice with the Forum. It is viewed with suspicion and distrust. The petitioner's complaint cannot be brushed aside easily just like that. The allegation that the Chairperson does not allocate fair distribution of funds under different schemes in execution to all the 14 wards equitably is serious and shocking.

The Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) was passed re-enacting the Tamil Nadu Panchayats Act, 1958, for establishing a three-tier Panchayat Raj system in the State to the elected Bodies at the Village, intermediate and District level relating to Panchayats for greater participation of people so as to make them institution of Self-Government and for more effective implementation of rural development programmes in conformity with the constitution (Seventy third Amendment) Act, 1992.

Clause (c ) of sub-section (1) of section 200 of the Tamil Nadu Panchayats Act, 1994 (T.N.Act 21 of 1994) empowers the inspecting officers of Panchayat to enter the office of any Panchayat and inspect any records, registers or other documents kept therein.

Section 202 of the Act empowers the Inspector of Panchyats to:

(i) Suspend or cancel any resolution passed, order issued, or licence or permission granted, or

(ii) Prohibit the doing of any act which is about to be done or is being done in pursuance or under colour of this Act, if in his opinion:-

(a) such resolution, order, licence, permission or act has not been legally passed, issued, granted or authorized, or

(b) such resolution, order, licence, permission or act is in excess of the powers conferred by this Act or any other law or an abuse of such powers or is considered by the Inspector to be otherwise undesirable.

Hence whenever resolutions on allotment and distribution of funds are passed by the District Panchayat the Inspector may peruse such resolution for its majority authenticity, equitable distribution of funds to different wards or neglect or omission of certain wards in a glaring manner and act accordingly to maintain transparency, fairness and equity. This is in the light of the occurrence on 12.01.2022.

It is pertinent to point out that the Secretary of the District Panchayat neither in the report nor deposition has shared the details of ward wise allocation of funds during the last 2 years that raises a valid suspicion in the mind of the Forum as to the fair distribution in the District Panchayat area in allotting adequate funds to various wards 14 in number in the District.

Therefore, the Collector as the Inspector of Panchayats is directed to ensure that the funds received from Government under different heads allotted to the District Panchayat are distributed equitably, fairly and reasonably without any large gaps, discrepancies and lopsidedness so that all the wards would benefit from such allocation in an identical manner serving the cause of the local residential citizens of the wards without imbalance, discrimination, undue favoritism and undue neglect. This would also ensure uniform and all-round rural growth and development throughout the length and breadth of the district in an encompassing manner. The Inspector of Panchayats of Tenkasi District is also directed to examine whether equity principle has been adopted so far in such distribution of funds in the Tenkasi District Panchayat and ensure parity of allotment by the council so that development could be even and fair throughout.

A copy of this order is being sent to DRD and Government in R.D. for information and further follow up.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) கனிமொழி,
6–வது வார்டு கவுன்சிலர்
128, வடக்குமாசி வீதி
தென்காசி – 627 811.
தென்காசி மாவட்டம்.

2) முதன்மை செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை– 600 009.

3) இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
1, ஜீனிஸ் சாலை,
பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை,
சென்னை – 600 015.

4) மாவட்ட ஆட்சியர்
தென்காசி மாவட்டம்,
தென்காசி.

5) மாவட்ட பஞ்சாயத்து தலைவி,
மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம்
தென்காசி மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி

6) மாவட்ட பஞ்சாயத்து செயலாளர்,
தென்காசி மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

சென்னை - 600 032